# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2011 நவம்பர் திங்கள் 24.11.2011–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**
**நகர்மன்றத்தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

இந்நகர்மன்ற தீர்மானம் எண். 185 நாள் 20.04.2007–ன்படி குடிநீர் இணைப்பிற்கு வரி செலுத்துகையில் காலம் தாமதம் ஏற்படும் போது அதற்காக விதித்திருக்கும் அபராதத் தொகை விதிக்கும் தீர்மானத்தை ரத்து செய்திட வேண்டி.

அ.குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 5630/2011/பி1)

**தீர்மானம் எண்.1: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**
**நகர்மன்றத்தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர் ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட பொதுப்பணித் துறைக்கு சொந்தமான வெள்ளியாகுளம் 5" அடி அளவிற்கு மண் தூர்ந்து போய் உள்ளதை பொதுப்பணி துறை மூலம் தூர் அள்ளி ஆழப்படுத்தவும், வெள்ளியாகுளத்திற்கு நீர் வரும் பாம்பூரி கால்வாய் சீர் செய்து நீர் வரத்தை சரி செய்யவும், சட்டர்கள் அமைக்கவும், வெள்ளியாகுளம் நிறைந்து உபரி நீர் வெளியேறும் பாதை சரி செய்யவும், பத்தறை அருகில் பாம்பூரி கால்வாயில் தடுப்பணை கட்டவும், இடிந்து போய் ஆபத்தான நிலையில் உள்ள பாலத்தை அகற்றி புதிய பாலம் கட்டவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக பொதுப்பணித் துறையை கேட்டுக்கொள்ளவது தொடர்பாக.

அ.குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 5630/2011/பி1)

**தீர்மானம் எண்.2: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களில் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களை ஆய்வு செய்து 2003 –ம் ஆண்டு வெளியிடப்பட்ட பட்டியல் மற்றும் 2007–ல் வெளியிடப்பட்ட இணைப்பு பட்டியல்களில் ஏராளமான மக்கள் விடுபட்டுள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றதின் பேரிலும், முதியோர் உதவித் தொகை, ஆதரவற்றவர்களின் தொகை மற்றும் இதர அரசு நல உதவித்திட்டங்கள் பெறவும், பட்டியலில் விடுபட்ட மக்களுக்கு வாய்ப்பில்லாத நிலை உருவாகி உள்ளதால் மேற்படி பட்டியலை மறு ஆய்வு செய்து விடுபட்டுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் குடும்பங்களை சேர்த்து புதியதாக வறுமைக்கோட்டு பட்டியல் தயார் செய்து அரசுக்கு அனுப்ப மன்றம் தீர்மானிக்கலாம்.

அ.குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். அ2/10370/2008)

**தீர்மானம் எண்.3: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி வரவு செலவு அறிக்கை 2010–2011–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடும், 2011–2012 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடும் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வருடங்களுக்கான வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 5630/2011/பி1)

**தீர்மானம் எண்.4: தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி கணனி அறையில் அமைந்திருக்கும் UPS ( 5 KV ) –க்கான வருடாந்திர பராமரிப்பு கட்டணம் (AMC) 02.11.2011–வுடன் முடிவடைவதால், 03.11.2011 முதல் 02.11.2012 வரையிலான AMC கட்டணம் ரூ. 8,273/– மேற்படி UPS சப்ளை செய்த Numeric Power System நிறுவனத்திற்கு வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 3562/2011/அ2)

**தீர்மானம் எண்.5: அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

குளச்சல் நகராட்சியின் புதிய துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு.அ.ஜேசுராஜன் அவர்கள் தொலைபேசித் தொடர்பு வசதி செய்து தர கேட்டுக் கொண்டுள்ளார். எனவே, நகர்மன்ற துணைத் தலைவர் இல்லத்தில் BSNL கேபிள் வசதி இல்லாததால் கம்பியில்லா தொலைபேசித் தொடர்பு (Will Phone) வசதி செய்து தரவும் அதற்குண்டான முன்வைப்புத் தொகையினை BSNL நிர்வாகத்திற்கு (ரூ.500/–) செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோரது தொலைபேசியின் மாதாந்திர செலவுத் தொகையினை நகராட்சி செலுத்தி வருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6920/co/2011)

**தீர்மானம் எண்.6: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்வதற்கு 21.09.2011–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ். ரமேஷ்,<br>பிள்ளையார்கோவில்,<br>மணவாளக்குறிச்சி. | மதிப்பீட்டைவிட 134.96% கூடுதல்<br>(ரூ. 25000/–) |
| 2 | திரு.எம்.சதிஸ்குமார்,<br>ஆழ்வார்கோவில், நெய்யூர். | மதிப்பீட்டைவிட 144.36% கூடுதல்<br>(ரூ. 26000/–) |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 144.36% கூடுதலாக கொடுத்துள்ள திரு.எம்.சதிஸ்குமார், ஆழ்வார்கோவில் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிமம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு: 1)** நகர்மன்ற தீர்மானம் எண். 1640 நாள் 30.06.2011–ன்படி மேற்படி தொலைக்காட்சி

வைத்து விளம்பரம் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு குறைந்த பட்சமாக ரூ. 10,640/–க்கு மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

2) மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 144.36% கூடுதலாக கொடுத்துள்ள திரு.எம்.சதிஸ்குமார், ஆழ்வார்கோவில் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒரு வருடத்திற்கு குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 6536/2010/அ1)

**தீர்மானம் எண்.7: தீர்மானம் ரத்து செய்யப்பட்டது. மறு ஒப்பந்தப்புள்ளி கேட்டிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.22–க்கு 22.09.2011 அன்று ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஏலக்கேள்வி கேட்டுள்ளனர்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | நகராட்சி நிர்ணயம் செய்த தொகை | ஏலக்கேள்வி தொகை | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.அன்வர் சாதிக், ஆசாத்நகர், குளச்சல் | ரூ. 1500/– | ரூ. 1550/– | ரூ. 25,000/– |
| 2 | திரு. தாகீர் உசேன், பர்னட்டிவிளை, குளச்சல். | ரூ. 1500/– | ரூ. 1560/– | ரூ. 25,000/– |

மேற்படி கடை எண். 22–க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.தாகீர் உசேன் என்பவர் அரசாங்க மதிப்பைவிட கூடுதலாக கோரியுள்ளார். அன்னாருக்கு உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மேற்படி கட்டிடத்திற்கு நகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக மாத வாடகை ரூ.1560/–க்கு ஏலக்கெள்வி கேட்டுள்ள திரு.தாகீர்உசேன் என்பவரின் ஏலக் கேள்வியை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 2035/2002/அ2)

**தீர்மானம் எண்.8: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.30–க்கு 22.09.2011 அன்று ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஏலக்கேள்வி கேட்டுள்ளனர்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | நகராட்சி நிர்ணயம் செய்த தொகை | ஏலக்கேள்வி தொகை | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. சதீஸ், 24/34, களிமார், குளச்சல். | ரூ. 1500/– | ரூ. 1515/– | ரூ. 25,000/– |
| 2 | திரு. அபிஸ், பண்டகசாலைபுரம், குளச்சல். | ரூ. 1500/– | ரூ. 1510/– | ரூ. 25,000/– |

மேற்படி கடை எண். 30–க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.சதீஸ் என்பவர் அரசாங்க மதிப்பைவிட கூடுதலாக கோரியுள்ளார். அன்னாருக்கு உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மேற்படி கட்டிடத்திற்கு நகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக மாத வாடகை ரூ.1515/–க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.சதீஸ் என்பவரின் ஏலக்கெள்வியை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 2035/2002/அ2)

**தீர்மானம் எண்.9: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிக ஏலதொகை கேட்டவரின் ஏலக்கேள்வி ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் பொருத்தப்பட்டுள்ள "**தமிழ் வாழ்க**" என்ற எழுத்துக்கள் பொறித்த மின் ஒளிப்பலகை எரியாமல் பழுதாகி உள்ளதால் மின் ஒளிப்பலகையில் உள்ள Transformer மற்றும் Tube ஆகியவற்றை மாற்றுவதற்கு உத்தேச செலவு ரூ.5,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3031/2010/இ1)

**தீர்மானம் எண்.10: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப் பகுதிக்கு செல்லும் 4" நீர் உந்து குழாய்களில் நீர் கசிவு ஏற்பட்டதால் குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. எனவே போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதியும், அப்பகுதி பொது மக்கள் நலன் கருதியும் நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—ன்கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | துறைமுகப் பகுதிக்கு செல்லும் 4" நீர் உந்து குழாய்களில் உள்ள நீர் கசிவு கண்டறிந்து சரி செய்தல். | ரூ. 30,000/— |

**<u>அ.குறிப்பு</u> :** குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் மேற்படி பணி செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4007/2011/இ2)

**தீர்மானம் எண்.11: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் உள்ள டாங்கிற்கு வெள்ளிப்பிள்ளையார் கோவில் பம்பு ரூம் அருகில் உள்ள இரண்டு ஆழ்துளை கிணறுகளிலிருந்து 4"பிரதான குழாய் வழியாக தண்ணீர் ஏற்றி துறைமுகத் தெருவுக்கு குடிநீர் வினியோகம் செய்யும் குழாயில் மூன்று இடங்களில் உடைவு ஏற்பட்டதால் துறைமுகத்தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே குழாயில் உள்ள பழுதை சரி செய்வதற்கு போர்க்கால அடிப்படையில் குடிநீரின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—ன்கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | துறைமுகத்தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் 4" பிரதான குழாயில் 3 இடங்களில் ஏற்பட்ட உடைவு சரி செய்தல், | ரூ. 20,000/— |

**<u>அ.குறிப்பு</u> :** குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் மேற்படி பணி செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.12: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு மினி லாரி TN-74-T-5508—ன் காப்பீடு 20.09.2011—ல் முடிவடைந்த நிலையில் அதனை புதுப்பிப்பதற்காக ரூ.12,696/—ஐ செலுத்த கேட்டு 12.09.2011—ல் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், நாகர்கோவில் கிளையிலிருந்து அறிவிக்கை

பெறப்பட்டது. அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி தொகையினை செலுத்தி காப்பீட்டை புதுப்பித்த விவரம் மன்றத்தின் பார்வைக்காகவும், தகவலுக்காகவும் வைக்கப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> **:** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 2913/09/எச்1)

**தீர்மானம் எண்.13: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிரிமி நாசினிகள் இருப்பில் இல்லாத காரணத்தால் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான கீழ்காணும் பொருட்களை வாங்குவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) பிளீச்சிங் பவுடர் – 1000 லிட்டர்
2) பினாயில் – 200 லிட்டர்
3) நீர்த்த சுண்ணாம்பு தூள் – 2000 கிலோ

<u>**அ.குறிப்பு**</u> **:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1388/2009/எச்1)

**தீர்மானம் எண்.14: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சி பணிபுரிந்து வரும் 46 துப்புரவு பணியாளர்கள், 4 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள், 3 ஓட்டுநர்கள் மற்றும் 2 தெருவிளக்கு பிரிவு பணியாளர்கள் ஆகியோருக்கு 2 ஜோடி சீருடைகளை ENTYCE Show Room, நாகர்கோவில் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து வழங்குவதற்கும், சீருடைகளுக்கான தையற்கூலி வழங்குவதற்கும் ஆகும் மொத்த உத்தேச செலவுத் தொகை ரூ. 75,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> **:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3027/2010/எச்1)

**தீர்மானம் எண்.15: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி TN-74-Z-8931–ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக, மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ரூ.30,000/– மதிப்பீட்டில் சரி செய்வதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1703, நாள் 30.08.2011–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 04.10.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | M/s.KSSS ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில். | 0.07% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | M/s. மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் 0.05% ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> **:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 4739/2008/எச்1)

**தீர்மானம் எண்.16: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 50 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் கீழ்காணும் விவரப்படி 4 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது.

| வ.எண். | எந்த தேதி முதல் காலியாக உள்ளது. | காரணம் |
|---|---|---|
| 1 | 24.07.2005 | இறப்பு (எஸ்.தங்கப்பன்) |
| 2 | 31.07.2007 | பணி ஒய்வு (எஸ். மார்த்தாண்டன்) |
| 3 | 29.05.2010 | இறப்பு (ஜி. அய்யப்பன்) |
| 4 | 13.07.2010 | நிரந்தர பணிநீக்கம் (எஸ்.வில்பிரட்) |

மேற்காணும் பணியிடங்களை நிரப்பி கொள்வதற்கு நகராட்சியின் மொத்த வருவாயில் பணியாளர் செலவினம் மற்றும் ஓய்வூதியம் 49% மிகாமல் இருத்தல் வேண்டும். ஆனால் இந்நகராட்சியின் மொத்த வருவாயில் மேற்காணும் செலவினங்கள் 49% அதிகமாக உள்ளது. எனவே இந்நகராட்சியின் பொது சுகாதார நலனில் மேற்படி பணியிடங்களின் அவசியத்தை கருத்தில் கொண்டு விதிகளை தளர்த்தி, காலியாக உள்ள 4 துப்புரவு பணயாளர்கள் பணியிடங்களை நிரப்பிக் கொள்ள உரிய ஆணைகளை பிறப்பிக்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2622/2009/எச்1)

**தீர்மானம் எண்.17: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.சிவதாணுமாலையன் என்பவரின் வைப்புத் தொகை ரூ.7,000/– காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யப்பட்டு இருப்பில் உள்ளது. மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3365/2011/பி1)

**தீர்மானம் எண்.18: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.தங்கமணி என்பவரின் பில்லில் பிடித்தம் செய்த தொகை ரூ.2,550/– காலங்கடந்த பதிவேட்டில் இருப்பில் உள்ளது. மேற்படி தொகையினை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 5787/2011/பி1)

**தீர்மானம் எண்.19: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தையில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் வணிக வளாக முதல் தளத்தில் அமைந்துள்ள கடை எண்.29, 30 ஆகியவற்றை குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் வாடகைத் தொகை செலுத்தாத காரணத்தால் கடையின் குத்தகை உரிமத்தை ரத்து செய்வதற்கும், அன்னார் செலுத்தியிருந்த வைப்புத் தொகையினை வாடகை தொகைக்காக நகராட்சி கணக்கில் ஈடு செய்வதற்கும் இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 789, நாள் 27.02.2009–ன் மூலம் ஒப்புதல் அளித்ததின் அடிப்படையில் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு, வைப்புத்தொகை ஈடு செய்யப்பட்டது. அதன் பின்னர் மேற்படி கடைகள் குத்தகைக்கு விடுவதற்கு மறு ஏலம் கோரப்பட்டும் எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வராமல் காலியாகவே உள்ளது. தற்போது திரு.லியோன் என்பவர் மேற்படி கடைகளை மாத வாடகைக்கு எடுக்க விண்ணப்பித்துள்ளார். போட்டியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்ணயித்துள்ள வாடகைத்

தொகை ரூ.1,000/—க்கு அன்னாருக்கு மாத வாடகையாக விடுவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2035/2011/அ2)

**தீர்மானம் எண்.20: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 நவம்பர் திங்கள் 24.11..2011–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

இந்நகராட்சி கணனி அறையில் அமைந்திருக்கும் 5KV UPS திடீரென்று ஆப் ஆகிவிடுவதால் நியுமெரிக் பவர் சிஸ்டம் நிறுவனத்திலிருந்து சீனியர் என்ஜினியர் வரவழைக்கப்பட்டு UPS மற்றும் பேட்டரிகள் முழுவதும் ஆய்வு செய்ததில் சில பேட்டரிகள் மோசமாக உள்ளதால் 14 பேட்டரிகளையும் மாற்றிவிட அறிக்கை அளித்ததன்பேரில் 14 புதிய பேட்டரிகள் வாங்கவும், பழைய பேட்டரிகளை விலைக்கு கொடுக்கவும், உத்தேச மதிப்பீடு செலவு ரூ. 1,45,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3562/2011/அ2)

**தீர்மானம் எண்.21: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு 2011–12–ம் ஆண்டுக்கான எழுதுபொருட்கள் மற்றும் கணினி உபயோக பொருட்கள் வாங்குவதற்கு இந்நகர்மன்றத்தில் ரூ. 5,00,000/–க்கான மன்றப் பொருள் வைக்கப்பட்டது. அதற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.1650 நாள் 30.06.2011–ன்படி ரூ.2,00,000/–க்கு மட்டுமே அனுமதி வழங்கியது. மேற்படி தொகையில் குறைந்த அளவே எழுது பொருட்கள் மற்றும் கணினி உபயோக பொருட்கள் வாங்கப்பட்டது. தற்பொழுது சேவை மைய வரிவசூல் ரசீதுகள் போதிய அளவு இருப்பில் இல்லாதிருப்பதால் அவசர அவசியம் கருதி அவற்றை வாங்குவதற்கும், 2011–12 ஆம் வருடத்திற்கான எழுது பொருட்கள் வாங்குவதற்கான கூடுதல் தொகை ரூ. 2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u>

1) உத்தேச செலவுத்தொகை ரூ.2,00,000/–க்கு நகர்மன்ற தலைவர் முன்அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி சேவை மைய வரிவசூல் ரசீதுகள் வாங்குவதற்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரின்டிங் சொசைட்டி, கோவில்பட்டி நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 936/2011/எச்2)

**தீர்மானம் எண்.22: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக தரை தளத்தில் அமைந்துள்ள கடை எண்.29 வாடகைக்கு எடுத்த குத்தகைதாரர் வாடகைத் தொகை செலுத்தாத காரணத்தால் கடையின் வாடகை உரிமத்தை ரத்து செய்வதற்கு அன்னார் செலுத்தியிருந்த வைப்புத் தொகையினை வாடகை தொகைக்காக நகராட்சி கணக்கில் ஈடு செய்வதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1070, நாள் 28.10.2009–ன் மூலம் ஒப்புதல் அளித்ததின் அடிப்படையில் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு, வைப்புத்தொகை ஈடு செய்யப்பட்டது. மேற்படி கடை குத்தகைக்கு விடுவதற்கு மறு ஏலம் கோரப்பட்டும் எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வராமல் காலியாகவே உள்ளது. தற்போது திரு.சிஜிமோன் என்பவர் மேற்படி கடையை வாடகைக்கு எடுக்க விண்ணப்பித்துள்ளார்.

போட்டியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்ணயித்துள்ள வாடகைத் தொகை ரூ.1,500/– மாத வாடகையாக விடுவதற்கும், வைப்பு தொகை செலுத்துவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2035/2011/அ2)

**தீர்மானம் எண்.23: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி TN-74-5507–ன் முன்பக்கம் பழுதடைந்துள்ள 2 டயர்களை மாற்றி புதிதாக 2 டயர்களை பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.16,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1716, நாள் 30.08.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 04.10.2011–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஆனால் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. அதன் பின்பு 10.11.2011 மற்றும் 18.11.2011 ஆகிய தேதிகளில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்க முன்வராத காரணத்தால் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட MRF Tyres நிறுவனத்திடமிருந்து நேரடியாக டயர்களை வாங்குவதற்கு கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | அருள் டயர்ஸ்,<br>திங்கள் நகர். | ரூ.7900/– வீதம் 2 டயர்களுக்கு<br>ரூ. 15,800/– |
| 2 | அஸ்வின் டயர்ஸ்,<br>தக்கலை. | ரூ.8000/– வீதம் 2 டயர்களுக்கு<br>ரூ. 16,000/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் அருள் டயர்ஸ், திங்கள்நகர் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி நிறுவனத்திடமிருந்து டயர்களை வாங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7219/2008/எச்1)

**தீர்மானம் எண்.24: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி TN-74-Z-2339–ன் பிரேக் பைப்புக்கள் பழுதடைந்து விட்டதால் அதனை மாற்றி ரூ.2520/– உத்தேச செலவினத்தில் புதிய பிரேக் பைப்புக்கள் பொருத்த வேண்டியிருந்தது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்ததால் அவசர அவசியத்தை முன்னிட்டு விதி 15–ன்கீழ் மேற்காணும் பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான தொகை ரூ.2520/–ம் வழங்கப்பட்டது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

**அ.குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 4008/2010/எச்1)

**தீர்மானம் எண்.25: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு பதிவுசெய்யப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட 16–வது வார்டில் நிரவுவிளையில் உள்ள சாலை மிகவும் மோசமாகி குண்டும் குழியுமாக உள்ளது. பொதுமக்கள் நடந்து செல்வதற்கும், போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி சாலையில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு உத்தேச செலவு ரூ. 60,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** நிதிநிலையை உத்தேசித்து பொதுநிதி / திட்ட நிதியில் பணியை தேர்வு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 6965/2011/இ1)

**தீர்மானம் எண்.26: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட 4–வது வார்டில் சுனாமி காலனி மண்டம் அருகில் இருந்து கதவு எண். 4/671 வரை மண் சாலையாக உள்ளது. மழை காலங்களில் மண் அரித்து செல்லப்பட்டு சாலை குண்டும், குழியுமாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி சாலையில் Paver Block அமைத்து சாலை மேம்படுத்த மதிப்பீடு தொகை ரூ. 7,45,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** நிதிநிலையை உத்தேசித்து பொதுநிதி / திட்ட நிதியில் பணியை தேர்வு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 6996/2011/இ1)

**தீர்மானம் எண்.27: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட 16–வது வார்டில் களிமார் முண்டம்பிலாவடி பகுதியில் வடிகால் ஓடை இல்லாததால் வீடுகளிலிருந்து வரும் கழிவுநீர் சாலையின் மேல் சென்று கொண்டிருப்பதால் சாலை மிகவும் மோசமாகி குண்டும், குழியுமாக உள்ளது. கழிவுநீர் திறந்த வெளியில் செல்வதால் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு சுகாதார சீர்கேடு நிலவும் வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி சாலையில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு உத்தேச செலவு ரூ. 7,45,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** நிதிநிலையை உத்தேசித்து பொதுநிதி / திட்ட நிதியில் பணியை தேர்வு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 6965–2/2011/இ1)

**தீர்மானம் எண்.28: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட 20–வது வார்டு செட்டிவிளையில் சாலை மிகவும் மோசமாகி பொதுமக்கள் நடந்து செல்வதற்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே செட்டிவிளை சாலையில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு உத்தேச செலவு ரூ. 1,75,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** நிதிநிலையை உத்தேசித்து பொதுநிதி / திட்ட நிதியில் பணியை தேர்வு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 6997/2011/இ1)

**தீர்மானம் எண்.29: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் R.C.Church முன்பகுதியில் பயணிகள் நிழற்குடை அமைப்பதற்கு உத்தேச செலவு ரூ.3,00,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** நிதிநிலையை உத்தேசித்து திட்ட நிதியில் பணிசெய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7153/2011/இ1)

**தீர்மானம் எண்.30: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள ஆழ்துளை கிணறுகளில் இருந்து மோட்டார்கள் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு தினமும் ஒரு மணி நேரம் வீதம் ஒவ்வொரு பகுதிகளுக்கும் வால்வுகளை ஆப்ரேட் செய்து தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வால்வுகளையும் தினமும் ஆப்ரேட் செய்வதால் வால்வுகளின் பாகங்கள் பழுதடைந்து குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே கீழ்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த வால்வுகளை மாற்றி, புதிய

வால்வுகள் வாங்கி மாற்றுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.57,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) **<u>3" Sluice Valve</u>**
   (i) மதனாவிளை
   (ii) ஈழக்காணிவிளை
   (iii) மொகைதீன்பள்ளி
   (iv) பீச் ஜங்சன் ( STD Booth ) அருகில்
2) **<u>4" Sluice Valve</u>**
   (i) மார்க்கெட் பின்புறம்
   (ii) பீச் காணிக்கை மாதா கோயில் முன்புறம்
   (iii) தும்பக்காடு நடராஜன் கடை பக்கம்
3) **<u>5" Sluice Valve</u>**
   (i) சி.எம்.சி.காலனி சப்ளை வால்வு

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7411/2010/இ2)

**தீர்மானம் எண்.31: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சீம்பிளிவிளை ஆழ்துளை கிணறு எண்.3, வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.6, சீம்பிளிவிளையில் ஆழ்துளை கிணறு எண்.12 மற்றும் மாதா காலனி Sump அருகில் ஆழ்துளை கிணறு, மாதாகாலனி Sump—க்குள் உள்ள Mono Block மோட்டார் ஆகியவை நல்லமுறையில் தண்ணீரை வெளியேற்றாததாலும், மேலும் மோட்டார்கள் அனைத்தும் பழைய மோட்டார்களாக இருப்பதாலும், குடிநீரின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பழைய மோட்டார்களை தூக்கி விட்டு, இருப்பில் இருக்கும் மோட்டார்களை மேற்குறிப்பிட்ட ஆழ்துளை கிணறு Sump-யில் இறக்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 25,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7410/2010/இ2)

**தீர்மானம் எண்.32: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 10.11.2011—ம் தேதிய ந.க.எண்.5675/2011/பி1 எண்ணிட்ட மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளவாறு குளச்சல் நகராட்சி நகர்புற உள்கட்டமைப்பு திட்டப் பணிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 321.00 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | நீளம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | காமராஜ் சாலையில் தார்தளம் அமைத்தல் | 0.820 | 28.00 |
| 2 | பர்னட்டிவிளை முதல் பாலத்தன்கரை வரை சாலையில் தார்தளம் அமைத்தல் | 0.67 | 15.00 |
| 3 | நரிக்கல் மற்றும் சிங்கன்காவு பகுதியில் தார்தளம் அமைத்தல். | 0.640 | 26.00 |
| 4 | நெசவாளர் தெருவில் தார்தளம் அமைத்தல். | 0.190 | 7.00 |
| 5 | துறைமுகம் சாலையில் தார்தளம் அமைத்தல். | 0.848 | 54.65 |
| 6 | விவேகானந்தர் சாலை, சன்னதிதெரு முதல் வெள்ளிப்பிள்ளையார் கோவில் வரை தார்தளம் அமைத்தல். | 0.820 | 21.00 |
| 7 | வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் கொட்டில்பாடு வரை தார்தளம் அமைத்தல். | 0.457 | 14.25 |

| | | | |
|---|---|---|---|
| 8 | ஆசாரிமார் இசக்கியம்மன் வடக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 0.105 | 3.00 |
| 9 | முகைதீன்பள்ளி ரோட்டில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 0.350 | 12.60 |
| 10 | பந்தவிளை சாலையில் Pavar Block அமைத்தல். | 0.435 | 19.50 |
| 11 | மார்க்கெட் ரோட்டில் Pavar Block அமைத்தல். | 0.625 | 30.60 |
| 12 | ஜேம்ஸ் ஆஸ்பத்திரி முதல் திக்கணங்கோடு சாலை வரை இருபக்கமும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 1.51 | 78.00 |
| 13 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட முக்கியமான சாலைகள் மற்றும் சந்திப்புகளில் CFL Lamp அமைத்தல். | 3.98 | 12.00 |

**அ.குறிப்பு :** மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மதிப்பீடு தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 7057/2011/இ1)

**தீர்மானம் எண்.33: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் நகர்மன்ற உறுப்பினர்களின் மனுவின்படியும், நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர், பொறியாளர் அறிவுரையின்படியும் கீழ்கண்ட பகுதிகளில் புதியதாக மின்கம்பம் அமைத்து CFL விளக்கு அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | வார்டு எண். 2–ல் மெயின்ரோட்டிலிருந்து மதனாவிளை செல்லும் பாதையில் புதிதாக மின்கம்பம் அமைத்து CFL விளக்கு அமைத்தல். |
| 2 | வார்டு எண்.2–ல் பொட்டல் ரோட்டிலிருந்து தெற்காக செல்லும் பாதையில் புதிதாக மின்கம்பங்கள் அமைத்து CFL விளக்கு அமைத்தல். |
| 3 | வார்டு எண்.3–ல் மின்கம்ப எண். FIII-38, FIII-77, FII-27 மற்றும் ஆக்கர் அமீன் வீடு முன்பு, காஜா கடை அருகில் கீழத்தெரு சந்திப்பு, ஹாஜி மீரான் பள்ளி வாசல் முன்பு போன்ற இடங்களில் CFL விளக்கு அமைத்தல். |
| 4 | வார்டு எண்.3–ல் கீழத்தெரு சந்திப்பில் நிற்கும் மின்கம்பத்தில் புதிதாக CFL விளக்கு அமைத்தல். |
| 5 | வார்டு எண். 7–க்குட்பட்ட அந்தோணியார் காலனியில் FII-9 எண் கொண்ட மின்கம்பத்தில் புதிதாக CFL விளக்கு அமைத்தல். |
| 6 | வார்டு எண். 12–க்குட்பட்ட துறைமுகத்தெருவில் FII-81, FII-83 மின்கம்பங்களில் புதிதாக CFL விளக்கு அமைத்தல். |
| 7 | வார்டு எண். 19–க்குட்பட்ட நெசவாளர் தெருவில் வீ.எண்.19/97–1 எண் கொண்ட வீட்டின் அருகாமையில் நிற்கும் மின்கம்பத்தில் புதிதாக CFL விளக்கு அமைத்தல். |
| 8 | வார்டு எண். 19–க்குட்பட்ட சி.எஸ்.ஐ. சர்ச்சின் அருகாமையில் உள்ள மின்கம்பத்தில் புதிதாக CFL விளக்கு அமைத்தல். |
| 9 | துறைமுக பாலம் முதல் மீன் ஏலமிடும் பிளாட் வரை உள்ள ரோட்டில் முக்கிய பாதைகளில் CFL விளக்கு அமைத்தல். |
| 10 | வார்டு எண்.20 வீட்டு எண்.20/85எ. முன்பாக புதிதாக மின்கம்பம் அமைத்து CFL விளக்கு அமைத்தல். |
| 11 | வார்டு எண். 24–ல் புல்லன்விளையில் FI-48 மின்கம்பத்தில் CFL விளக்கு அமைத்தல். |
| 12 | வார்டு எண்.24–ல் காமராசர் சாலை, சுடலை மாடசுவாமி கோவில் முன் மின்கம்பம் அமைத்து CFL விளக்கு அமைத்தல். |
| 13 | வார்டு எண்.24–க்குட்பட்ட காமராசர் சாலை, J.S.R. ஏஜென்ட் பின்புறம் புதிதாக மின்கம்பம் அமைத்து CFL விளக்கு அமைத்தல். |
| 14 | வார்டு எண். 24–ல் பள்ளிவிளாகம், உச்சினிமாகாளி அம்மன் ஆலயம், நரிக்கல் சிவசாஸ்தா ஆலயம் முன்புறம் CFL விளக்கு அமைத்தல். |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 4738/2010/இ1)

**தீர்மானம் எண்.34: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் வணிக வளாக முதல் தளம் கடை எண்.29, 30, 32 மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக தரைதளம் கடை எண்.29 ஆகியவற்றின் குத்தகைதாரர்கள் வாடகை செலுத்தாத காரணத்தால் இந்நகர்மன்ற தீர்மானம் எண். 789 நாள் 27.02.2009 –ன்படியும் தீர்மானம் எண்.1040, நாள் 28.10.2009–ன்படியும், குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்பு தொகையை நகராட்சி கணக்கில் ஈடு செய்யப்பட்டது. ஈடு செய்யப்பட்ட வைப்புத் தொகை போக கீழ்காணும் விபரப்படி நிலுவையில் உள்ள வாடகை விவரம் பின்வருமாறு.

| கடை எண் | குத்தகைதாரர் பெயர் | வைப்பு தொகை ரூ. | செலுத்தப்பட வேண்டிய வாடகை தொகை ரூ. | வைப்பு தொகை ஈடு செய்தது போக பதிவேட்டிலுள்ள மீதி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் | | | | |
| 29 | திரு.ரப்பேல்தாஸ் | 25,000/– | 45,300/– | 20,300/– |
| கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் | | | | |
| 30 | திரு.அஜயன் | 10,000/– | 21,700/– | 11,700/– |
| 32 | திரு.ஜலாலுதின் | 10,000/– | 26,250/– | 16,250/– |

மேற்படி கடைகளை குத்தகைக்கு எடுப்பதற்கு மனுக்கள் வரப்பெற்றுள்ளதால் அக்கடைகளின் மீது ஏற்கெனவே உள்ள மேற்காணும் விவரப்படியான நிலுவைத் தொனையினை கேட்பு பதிவேட்டில் கணினியிலும் நீக்கம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ2/2035/2002)

**தீர்மானம் எண்.35: தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படாமல் ரத்து செய்யப்படுகிறது. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

குளச்சல் காமராஜர் பேருந்து நிலையத்தினுள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு இடையூறாக பேருந்து நுழையும் பகுதியிலும், உள்பகுதியிலும் வேன்கள் மற்றும் கார்கள் நிறுத்தி பேருந்து உள்ளே செல்வதற்கு இடையூறாகவும், பயணிகளுக்கு சிரமமாகவும் உள்ள வாகனங்களை பேருந்து நிலையத்தினுள் வராமல் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கிளை மேலாளர், குளச்சல் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே இப்பொருள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அ.குறிப்பு</u>:** நகர்மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில், இப்பொருள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள போக்குவரத்து காவல் ஆய்வாளர், குளச்சல் அவர்களுக்கு கடிதம் அனுப்பலாம்.

(ந.க.எண். 7256/2011/TPI)

**தீர்மானம் எண்.36: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. போக்குவரத்து காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

**குளச்சல் நகராட்சியின் 3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்**

குளச்சல் அண்ணாசிலை லத்தீப் கடை முன்பிருந்து சென்ட்ரல் ஹோட்டல் வரை சாலையில் நிறுத்தப்படுகின்ற இரு சக்கர வாகனங்களால் போக்குவரத்துக்கு இடையூறும், பொதுமக்கள் உயிருக்கு ஆபத்தும் ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தாமலும், விபத்துக்களிலிருந்து மக்களை காப்பாற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**<u>அ.குறிப்பு</u>:** மேற்படி இடம் நகராட்சிக்கு சொந்தமானதாக இல்லாததால், நகர்மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில், இருசக்கர வாகனங்களை அப்புறப்படுத்துவது தொடர்பாக காவல் துறைக்கு கடிதம் அனுப்பலாம்.

(ந.க.எண். 7418/2011/TPI)

**தீர்மானம் எண்.37: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. காவல்துறைக்கு கடிதம் அனுப்ப ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

**குளச்சல் நகராட்சியின் 8–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்**

இந்நகராட்சிக்குட்பட்ட ஏவிளம் கால்வாயில் செடிகள் படர்ந்து குப்பையாலும், பாசியாலும் அசுத்தமாக சுகாதார சீர்கேட்டை விளைவித்துக் கொண்டிருப்பதால், அதனை தூர் வாரி சுத்தம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** இந்நகராட்சிக்குட்பட்ட ஏவிளம் கால்வாய் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான தாகும். பொதுப்பணித்துறை தூர் வாங்கி சுத்தம் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி கடிதம் அனுப்பலாம்.

(ந.க.எண். 7284/2011/இ1)

**தீர்மானம் எண்.38: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, பொதுப்பணித்துறைக்கு தீர்மானம் அனுப்பிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

**குளச்சல் நகராட்சியின் 15–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்**

இந்நகராட்சிக்குட்பட்ட பாம்பூரி வாய்க்கால் 1986–ம் ஆண்டு கட்டப்பட்ட படித்துறை பொதுமக்கள் குளிப்பதற்கு பயன்படுத்த முடியாத நிலையில் இடிந்துள்ளது. தற்போது இடிந்துள்ள படித்துறையின் வடக்கு பகுதியில் புதியதாக ஒரு படித்துறை அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>:** பாம்பூரி வாய்க்கால் பொதுப்பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருவதால் பொதுப்பணித்துறை மூலம் படித்துறை அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி கடிதம் அனுப்பலாம்.

(ந.க.எண். 6992/2011/இ1)

**தீர்மானம் எண்.39: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, பொதுப்பணித்துறைக்கு தீர்மானம் அனுப்பிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

**குளச்சல் நகராட்சியின் 21–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்**

குளச்சல் நகராட்சி பகுதியில் விநியோகிக்கப்படும் குடிநீர் சுவை மாறி உப்புநீர் கலந்த சுவை ஏற்பட்டு உள்ளது. இதற்கு கடல் அருகில் இருப்பதாலும், ஏவிளம் கால்வாய் தண்ணீர் சுத்தமாக இல்லாததும் காரணமாகும். எனவே பாம்பூரி வாய்க்காலில் இருந்து கடலில் கலக்கும் நீரை கடலில் கலக்க விடாமல் அந்த இடத்தில் செக்டாம் அமைத்து தடுத்து ஏவிளம் சானலுக்கு திருப்பி விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>:** ஏவிளம். கால்வாய் மற்றும் பாம்பூரி வாய்க்கால் ஆகிய இரண்டும் பொதுப்பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருவதால் பாம்பூரி வாய்க்காலில் செக்டாம் அமைத்து, ஏவிளம் சானலுக்கு திருப்பி விடுவதற்கும் தீர்மானம் நிறைவேற்றி, பொதுப்பணித் துறையால் மேற்கண்ட பணிகளை செய்யுமாறு கோரலாம்.

(ந.க.எண். 7054/2011/இ1)

**தீர்மானம் எண்.40: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, பொதுப்பணித்துறைக்கு தீர்மானம் அனுப்பி வைத்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரிச்சந்தை மற்றும் வணிக வளாகப் பகுதியில் உள்ள கடைகளை குத்தகை மற்றும் வாடகைக்கு எடுத்துள்ள நபர்கள் கடைகளின் முன்புறம் உள்ள இடத்தினையும் சேர்த்து ஆக்கிரமித்து வியாபாரம் செய்து வருகின்றனர். இதனால் சந்தைக்கு வரும் பொதுமக்களுக்கு போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்படி கடையின் உரிமையாளர்களால் விதிமுறைகளுக்கு எதிராக கட்டி வைக்கப்பட்டுள்ள தற்காலிக மற்றும் நிரந்தர ஆக்கிரமிப்புகளை நகராட்சி மூலம் அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நிரந்தர ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துவதற்கு ஜே.சி.பி. உபயோகிப்பதற்கும், அதற்குரிய உத்தேச செலவுத் தொகை ரூ.10,000/—க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6982/2011/டிபிஐ1)

**தீர்மானம் எண்.41: அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொண்டு, நகராட்சியின் அனுமதி இன்றி விதிமுறைகளுக்கு மாறான ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி